DINAKARAN 24 AUG 09

# ஒவ்வொருவரும் 2 மரம் நடுங்கள்

## ஜக்கி வாசுதேவ் வேண்டுகோள்

திருப்பூர், ஆக.24: தமிழகத்தில் ஒருவர் 2 மரம் நட்டாலே 12 கோடி மரங்களை நட முடியும் என ஈஷா யோக மைய நிறுவனர் ஜகி வாசுதேவ் பேசினார்.

திருப்பூரில் ஈஷா யோகா மையத்தின் பசுமைத் திட்டம் சார்பில், நகரில் 25 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் விழா நேற்று நடந்தது. துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு மரம் நடும் பணிகளை துவக்கினார். இதில் ஈஷா யோக மைய நிறுவனர் ஜக்கி வாசுதேவ் பேசியதாவது:

திருப்பூர் பகுதியில் இன்று 25 ஆயிரம் மரக்கன்று நடப்படுகிறது. இது பெரிய காரியம் என பலர் கூறினர். ஆனால், இது ஒன்றும் பெரிய காரியமல்ல. ஒரு நாள் வேலை. இதற்கு அனைவரிடத்திலும் உற்சாகம் உள்ளது. ஆனால் இத்தனை நாள் நாம் இந்த பணிகளை மேற்கொள்ளாமல் விட்டுவிட்டோம். 15 ஆண்டுகளுக்கு முன்னால் இதுபோன்ற விழிப்புணர்வு ஏற்பட்டிருந்தால், இப்போது நகரம் பசுமையாக இருந்திருக்கும். ஆனால், இப்போது தான் நம்மிடம் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. அரசு, தொழில்துறை, சினிமா, மக்கள் என அனைத்து தரப்பினரும் கைகோர்த்துள்ளோம். இனி நம்மை யாராலும் தடுக்க முடியாது.

மரங்களை நட்டதோடு நம் பணி முடிவடையவில்லை. மரத்தை நட்டது ஒன்றும் பெரிய பணியல்ல. அதனை முறையாக பராமரிக்க வேண்டும். செல்லும் வழியில் காய்ந்து கிடக்கும் மரங்களை கண்டால் தண்ணீர் ஊற்றும் மனநிலை அனைவருக்கும் வர வேண்டும். நமக்கு தாகம் ஏற்பட்டால் எப்படி கெஞ்சி கேட்டு தண்ணீர் அருந்துவமோ, அதுபோல், மரங்களுக்கு தண்ணீரை கேட்டுப் பெற்று ஊற்ற வேண்டிய மனநிலை ஏற்பட வேண்டும். தமிழகத்தில் 12 கோடி மரங்கள் நட வேண்டும் என நான் கூறியவுடன் எல்லோரும் அது எப்படி முடியும் என்றனர். தமிழகத்தில் 6 கோடிக்கும் அதிகமானோர் வசிக்கின்றனர். இதில், ஒருவர் 2 மரங்களை நட்டால் கூட 12 கோடி மரங்களை நட்டுவிட முடியும்.

நம் நாட்டில் கங்கை நதி மிகவும் பிரசித்தி பெற்ற நதியாக உள்ளது. புன்னிய நதியாகவும் கருதப்படுகிறது. ஆனால், அது எல்லா நாட்களிலும் ஓடும் நதியாக இல்லாமல், விரைவில் சீசனுக்கு ஓடும் நதியாக ஆகிவிடும் என தற்போது எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வடமாநிலங்களில் மட்டுமல்ல. தமிழகத்திலும் பல ஆறுகள் காணாமல் போய் வருகின்றன. இதேநிலை தொடர்ந்தால், அடுத்த தலைமுறை ஆறு எது என்பதை படத்தில் தான் காண முடியும். இதனை தவிர்க்க எல்லா இடங்களிலும் மரங்களை நட வேண்டும். ஆற்றின் கரையோர பகுதிகளில் மரங்களை நட்டு ஆறு வறண்டுவிடாமல் தடுக்க வேண்டும். மரம் நடுவது மட்டுமே தற்போது ஏற்பட்டுள்ள வானிலை பாதிப்பை சீராக்கும் என கூற முடியாது. இதுவும் பலனளிக்கும் என்பது நிச்சயம்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதில் மாநகராட்சி துணை மேயர் செந்தில் குமார், சைமா தலைவர் வைக்கிங் ஈஸ்வரன், வளம் அமைப்பின் தலைவர் கிருஷ்ணசாமி உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.